www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR
SEINE, FRANCE

உ
சிவமயம்



பூநகரி தம்பிராயைச் சேர்ந்த

## திரு. தம்பு அவர்களின்

செல்வப் புதல்வனும்

~~பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனுமான~~

செல்வன்

## த. விமலேஸ்வரன் B. com

அவர்களின் மறைவு குறித்த

# நினைவு மலர்

16 - 09 - 1988

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உ
சிவமயம்

செல்வன்

# த. விமலேஸ்வரன் B. com

அவர்கள்



அன்னைமடியில் :
1963 - 09 - 25

ஆண்டவன் மடியில் :
1988 - 07 - 18

## திதி வெண்பா

ஆண்டு திரு விபவத்தில் அமைந்த நல் ஆடி தனில்
பூண்டவொரு பூர்வ பக்கதிதி பஞ்சமியாம் —
நீடு புகழ் தவப்புதல்வன் விமலேஸ்வரன் இளையனும்
ஈச னடி சென்றடைந்த நன்னாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உ
சிவமயம்

## விநாயகர் துதி

ஓங்கார உட் பொருளே ஒப்பற்ற விநாயகனே
விடத்தல் ஐங்கரனே வேழமுக மாமணியோ
ஆங்காரம் தீர்த்தெம்மை ஆட்கொண்டருளுகின்ற
தம்பிராய் பதி மேவும் ஆனைமுக அப்பா
காலமெலாம் நம்பியுனை கை தொழுத மைந்தன்
நுண்ணறிவாளன் விமலேஸ்வரச் செல்வன்
நின்பதமே தஞ்சமென உனை நாடி வந்தானே
உன்னடியில் சேர்த்தினிது இரு.

# வாழ்க்கை வரலாறு

பூமியில் ஜனனமும் மரணமும்
சுந்தர ஈழமாம் செந்தமிழ் நாட்டில்
கிளிநொச்சி தொகுதியாம் வளமிகு பதியில்
பூநகர் என்னும் பெரும்பதி தன்னில்
மண்ணிய தெங்கொடு கற்பக தருக்களும்
செந்நெலும் கன்னலும் கலைபெறு சாலையும்
நன்னீர் கேணிகள் நலம் திகழ் யாவும்
பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
கண்ணகை அம்மன் கருணை பொழியும்
சீர்பெறு ஊராம் தம்பிராய் பதியில்
வேளாண்மை யென்னும் வியன் மிகு தொழிலை
உயர்குலத் தோன்றல் உத்தமர் தம்புவும்
அவர் துணை நல்லாள் பொன்னம்மாவும்
செய்திடு தவத்தால் வந்தவதரித்த
திருநிறை செல்வன் விமலேஸ்வரனும்
செல்வமாய் வளர்ந்த சீருடையாளன்
பெற்றோர் உற்றோர் பெருவிருப்புடையோன்
உத்தம சகோதரருக்கு அன்பு தம்பியாய்
தரணியில் மகிழ்ந்தான் விமலேஸ்வரனே
விளையும் பயிரை முளையில் தெரியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாண்றோர் வாக்குக் கமையவே நின்று
வளர்பிறையாக எளிலொடு வளர்ந்தான்
தளர் நடை கண்டு தரணியில் மகிழ்ந்தனர்
தந்தை தன் பணியை ஆரம்ப பள்ளியில்
கருத்துடன் வைத்தனர்
கல்வியில் ஊக்கம் கனிவுடன் தோன்ற
மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கல்வியை
உகந்து மே கற்றுன்
வயாவிளான் தன்னில் பரீட்சைக்குரிய
பக்குவம் பெற்று
பல்கலைக்கழகம் புகுந்தனன் விமலன்
உயர் கலைக்கல்விகள் உவப்புடன் கற்று
பி. கம் பட்டம் பெற்றிடும் நாள் தனில்
இலட்சியப்பாதையில் எடுத்தடி வைததனன்
சிறைவாய்பட்ட சினேகிதற்காக
உண்ணாவிரதமதில் உவப்புடன் கலந்தான்
மண்சுமந்த மேனியெனும் மாசிலா நாடகத்தில்
மகத்தான பாத்திரத்தை மதிப்பாக முடித்தனனே
மனமுவந்து பார்த்தோர்கள் மெய் மறந்து விட்டார்கள்
ஒரு சில காலம் தன்னில் உற்றதோர்
நண்பன் விஜிதரனைக் காணமல்
உற்ற சினேகிதர்கள் உரைத்தெழுந்த போதினிலே
உண்ணாவிரதமதை மேற்கொண்டான் விமலன்
கட்டவிழ்ந்த இந் நாளை
கண்டறிந்த கஜமுகன் விரதமதை
கடுதியாய் முடிக்க கபடமது செய்தானே
பாரில் பல இடங்களிலும் அரியதோர் கல்வியை
ஆக்கும் பணிதன்னை அன்பாக செய்தனனே
தலைமைப் பதவிதனை தயவாக ஏற்றதனால்
தாங்கவொணு நண்பர்கள் சல்லடையாய் தேடினரே
கூடிய நண்பர்கள் கூட்டியே சென்று
குறையிலாக் காத்து குமரனாய் நிற்கையிலே
ஆற்றிய பணிதன்னை யார் சொல்லி ஆறுவது
ஆன்மாவின் விதிவசமே
ஏழைமக்கள் கைதனிலே எழுத்தாணி போலிருந்து



கூலி விவசாயிகட்கு கூடப் பிறந்தோனாய்
பாரினிலே பார்ப்போர்க்கு பாவலனாய் தானிருந்து
சாதி மத பேதமின்றி தன்மானம் காத்திருந்து
சிறுபிள்ளைகட்கு மாமாவாய் தானிருந்து
கற்கும் சிறியோர்க்கு கண்ணாடி வாத்தியாராயிருந்து
கிராமத்து மக்களது கிண்டல்களை யெல்லாம்
கூட்டுதாபனத்தால் கூட்டாக ஒன்றிணைத்தான்
கல்வியே பெரிதென கண்டறிந்த விமலன்
கண்ணுற்ற கிராமத்தில்
கல்வி நிலையத்தை தான் அமைத்தான்
தன்னுயிர்தன்னை நூராமல் பார்த்தோர்கு
நூல் நிலையம் தானமைத்தான்
அன்பான மக்களுக்கு அமுதமாய் தானிருந்தான்
பொய்களவு இல்லாமல் புகழுடனே
எள்ளளவும் வழுகாமல் இமைபோல காத்தார்கள்
இந்தியாவுக்கு போட்டியென்று இடையிலுள்ளோர்க்கு
சொன்னார்கள்

கண்மணிபோல் காத்த கற்பக தருதன்னை
காணமுடியாமல் கதறியழுகின்றனரே
செல்லப்பிள்ளை போல் சீராக பார்த்தார்கள்
சிதறி அழுகின்றனரே
இராணுவம் வந்தது என்று இடம் பெயர்ந்த
மக்களுக்கு அகதி முகாமமைத்து அன்பாக
காத்தனரே அரியதோர் பணியாக நிர்வாகம்
காத்தனனே
ஆற்றிய பணி தன்னை அன்பாக அறிந்தோர்கள்
போற்றிப் புகழ்மாலை சூட்டுகின்ற வேளை தனில்
பாவலரும் நாவலரும் பாராட்டும் வேளை தனில்
விரிவுரையாளர்கள் மேதைகள் யாவரும்
வெற்றி கொண்டாடும் வேளை தனில்
நல்லோர்கள் வாழ்தும் நயமர்ன நேரமதில்
பண்புள்ள மக்கள் பாராட்டும் காலமதில்
அஞ்சா நெஞ்சம் அமுதாகும் காலமதில்
பதினெட்டு ஏழு எண்பத்தியெட்டில்
சகுநமாய் வந்த திங்கள் திருநாளில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உத்தமன் விமலன் பல்கலைக்கழகம் நின்று
வரும் வழி தன்னில் இரண்டு மணியளவில்
கல்வியங்காடு என்னும் பதியில்
சட்டநாதர் கோவிலுக் கண்மையில்
இனம் தெரியாத இளைஞர்கள் தோன்றி
விமலா ! விமலா ! நில் எனக்கூறி
வேட்டுக்கள் தீர்த்தனரே
அம்மா என்று அலறியே துடித்தான்
வேட்டுக்கு இரையாய் அமைந்தான் விமலன்
ஒளி தந்த தீபம் அணைந்ததே என்று
அன்பான உயிர்கள் எல்லாம் அலறியே
நின்றார்கள். பண்பிலே நின்ற
உயிர் பரலோகம் சென்றதுவே.



Professor Rajaratnam's address to the students at the memorial meeting held to grieve the loss of T. Wimaleswaran.

" I am associating myself with you in our moment of grief over the loss of one of our popular students, T. Wimaleswaran.

As we cannot live in isolation, loss of every student is a part of a loss of our own selves It is a great tragedy that the University of Jaffna has lost a number of outstanding students.

Wimaleswaran came from the rural section of the Jaffna district and by hardwork and preserverence, entered the Uuiversity to read for a prestigious degree. Despite Personal problems, he has infact passed the examination and will be awarded his degree posthumously.

Wimaleswaran was a student activist and devoted most of his time in the protection of student rights. If the price of liberty is eternal vigilance, Wimaleswaran paid the price by his own life.

What more can a man give in his mortal life for a principle but the precious life itself. "

Prop. S. Rajaratnam
Head, Dept. of Management Studies

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமரர். தம்பு விமலேஸ்வரன்

விமலேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் 1983 இல் இருந்து 1987 வரை கல்வி பயின்றவர். வணிகவியல் சிறப்புப் பாட நெறிக்கு அனுமதி பெற்று பல்கலைக் கழகம் புகுந்த ஆண்டிலிருந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் பரீட்சை எழுதிய காலம் வரை பல்கலைக்கழகத்தில் பலரின் நன்மதிப்பைப் பெற்றதுடன், பல்கலைக் கழக மாணவர்கள் தொடர்பான விடயங்களில் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் கொண்ட மாணவனுகத் தொழிற்பட்டதையும் பலர் அறிவார்கள். மாணவர்களின் போராட்டங்களில் விமலேஸ்வரனின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

பல்கலைக் கழகத்திற்கு வெளியேயும், விமலேஸ்வரன் அவர்கள் சமூகப் பணிகளில் ஈடுபாடு கொண்டதையும் பலர் அறிவார்கள்.

அன்னுரின் அகால மரணம் பல்கலைக்கழக மத்தியில் பெரும் அதிர்ச்சியினையும், ஆழ்ந்த கவலையினையும் ஏற்படுத்தியுள்ளது. அது அவருடைய குடும்பத்தினர்க்கு ஒரு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சமகாலத்தில் அவருடன் படித்து, பழகிய மாணவர்களின் மத்தியில் விமலேஸ்வரன் ஒரு நீங்காத நினைவாகிவிட்டார்:

பேராசிரியர் ; **என். பாலகிருஷ்ணன்**
கலைப்பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.

---

யாழ் / பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.

நண்பா !

நல்லவர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை — அந்த
நல்லவர்கள் பட்டியலில் நீயும் ஒருவன்
படிப்பதற்காக போராடினுய் போராடுவதற்காக படித்தாய் —
ஆனுல்
போராடியே உன் உயிரை நீ இழந்தாய்
அனியாய அழிவில் நீ அழிந்தாய் — உனை
அழித்தார் அழிவையே நாடுவர்
ஆக்கத்துக்கான அழிவு அல்ல உன் இழப்பு — மீண்டும்
அழிவுப் பாதையை நாடுகிறது இச் சமூகம்
இறப்பும் பிறப்பும் உலக நியதி அது எமக்கும் உண்டு
என்ற மன ஆறுதலில் உன் பிரிவை தாங்குகின்ருேம்.

**யாழ் / பல்கலைக் கழக மாணவ நண்பன்.**

## வாழ்வாய் எம் இதயங்களில்

அன்புத் தம்பி... !

அன்று நான் இறுதியாக உன்னிடம் விடைபெற்ற நாள்........ நான் நினைத்தேனு அன்று உன்னை இழப்பேனென்று ''நாளைக்கு நான் வந்து காண்பேனக்கா'' என்று என்னை வழியனுப்பிவிட்டு மறுநாள் வந்தாயே........உயிரின்றி குண்டுபாய்ந்து வடுப்பட்ட உடலோடு! என்றுதான் என்நெஞ்சு இதைத்தாங்கும் ?

இறுதிநாள்.........பத்தே நிமிடங்களில் பத்துவிடயங்களை என்றும் போல அமைதியாகப், படபடப்பின்றி சிரித்த முகத்தோடும் சிந்தனைத் தெளிவோடும் கதைத்தாயே! எப்போது அப்பேச்சை இனிக் கேட்பேன் ?

அன்று என்னை வழியனுப்பும் போது "நேரம் போய்விட்டதே" என்று நேரம் பார்த்தாயே! நானே உன்னை அனுப்புவதற்கு நேரம் குறித்தேனே! அதை நினைத்து, மனம் ஆருத வேதனையில் வேகிறதே!

படிப்புப் படிப்பென்று உனது இறுதிக் காலத்தில் பறந்து, பறந்து படித்தாயே! பல்கலைக் கழக விரிவுரையாளர்களையும், வேறும் அறிஞர்களையும் சந்தித்து உன் சந்தேகங்களைத் தீர்த்தாயே! உன் ஆழமான, விரிந்த அறிவை நான் பாராட்டினேனே! வாழ்த்தினேனே! என் வாழ்த்திற்கும் வன்மையின்றிப் போனதே! உன்னைப் போல கற்ற, அறிவுடைய, அன்புடைய, பண்புடைய, நல் மனப்பாங்குடைய சகோதரனை தேடியுமடைய முடியாதே.

''எனக்குப் பகைவரில்லை; நான் பயப்படவும் தேவையில்லை'' என்ருய்! அதை நான் நம்பினேனே! மேற்படிப்புப் படிக்கவென்று ஆசைப்பட்டாய். நானும் உற்சாகப்படுத்தினேன்: எனது படிப்பிற்கும் உதவுவாயென நானிருந்தேன்: உனது ஆசைகளும், எனது நம்பிக்கையும்........யாவும் வீணுகிற்றே! கனவாயிற்றே!

வேலையொன்றில் சேர்வதற்காய் முயற்சிபல செய்தாய் வேலை வாய்ப்பு உன்னைத் தேடிவந்த வேளை. நீயிங்கு இல்லை: கஷ்ரத்தின் மத்தியில் உனக்கு கல்வி கற்பித்த உன்பெற்ருேர் பயன்விளையுமென்று எண்ணியிருந்த வேளையிலே நீ சென்ருயே!

உன் உடன் பிறந்த தங்கையின் ஆசைகளை நனவாக்க ஆசை கொண்டாய் அன்றும்........உன் தங்கைக்காய் உதவி கேட்டு நீ வந்தாய்: இறுதி நேரமும் உன் தங்கையின் சிந்தனையுடன் தானே நீ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்றுய்? நீ உனக்காக வாழ்ந்தது எப்போது? உதவியற்றவர்களுக்காய், வறியவர்க்காய் அன்பெனும் மென்மையான உணர்வு படைத்த உள்ளங்களுக்காய் நாளும் பொழுதும் நீ வாழ்ந்தாய். அவ்வுள்ளங்கள் துயரம் தாழாது தவிக்க நீ சென்று விட்டாயே.

அன்று எனது பரீட்சை முடிவை நீ பெற்றுவந்து சந்தோசத்துடன் தந்தாயே!

இன்று உனது பரீட்சை முடிவை நான் பெற்று யாருக்கு அளிப்பேன்? யாருடன் சந்தோசிப்பேன்?

நீ செய்த சேவைகளில் நான் கண்டதும் கேட்டதும் மிகச் சிலவே. ஆனுல் நீ எத்தனையோ பேருக்கு எப்படியெப்படி யெல்லாமோ உதவினுயென்று இப்போதும் அறிந்து கொண்டிருக்கிறேன். நீ உன் வீட்டுக்குமட்டுமா மகனுய் வாழ்ந்தாய்? எத்தனையோ வீடுகளுக்கு நீ தோன்றுத் துணையாக வாழ்ந்துள்ளாய். ஆனுலும் உன் வலதுகை உதவியதை உன் இடதுகை அறியாது. அவ்வகையில் தற் புகழ்ச்சி அற்ற உயர்ந்த பண்பு யார்க்கு வரும்? உன் தன்னலமற்ற சேவை மனப்பாங்கு யார்க்கும் வருமா?

வாழவேண்டிய நீ, வாழவேண்டிய வயதில் மறைந்து விட்டாய். நாமோ மாழுகிறேம், துயரத்தின் எல்லையில் நின்று. ஆனுலும் ஆயிரம் கைசேர்ந்து ஆதவனை மறைக்க முடியுமா? நீ என்றும் வாழுகிறுய், வாழுவாய் எம் மிதையங்களில்.

— அன்புக் குகாக்கா —

## தாங்குமா எம்மிதயம்

ஐயகோ............
இவ்வேதனையை நாம்
எப்படிப் பொறுத்திருப்போம்?
எம் நெஞ்சக் கூண்டில்
உன் மரணமெனும் இரும்புக்கரம் நுழைந்து
எம் இதயத் துண்டங்களை
இறுகப் பிழிகின்றதே ...!
தாங்குமா எம்மிதயம்?
எம் நண்பா!
எவற்குமினியவனே!
சீரிய சிந்தனையும்
சினக்காத உன்குணமும்
கோடியென தேடிவரும் நண்பர்களும்
கொண்டவனே!
பாவிகள் நாம் கொடுத்து வைக்கவில்லை
உன்னேடு
பலநாள் வாழ்வதற்கு
குற்றமற்ற உன் சேவைக்கு
குண்டுதான் பரிசா?
ஐயகோ............
தேடியலைந்தாலும்
உனைப்போலொரு நண்பன்
கிடைக்கப் போவதில்லை ஆனுல்......
மரணத்தில் நீ மறையவில்லை
எம் நெஞ்சு உன் நினைவு
சுமந்தென்றும் வாழ்ந்திருக்கும்
உன் இலட்சிய விதைகள்
வளர்ச்சி பெற்று
பயன் விளையும் விருட்சமாகும்
உறுதி நண்பா!

— உனது நண்பர்கள் —

www.tamilarangam.net

# ஒரு கிராமத்தின் ஆத்மாவில்———?

எங்கள் கிராமத்தின்
ஆத்மாவோடு — — —
இரண்டறக் கலந்துவிட்டவன்
அந்தக் — — —
கண்ணாடி மாஸ்டர்.
ஆம் — — —
அதுதான் நாம்
அவனுக்குச் சூட்டிய
அன்பு மகுடம்
1986 ஆம் ஆண்டில்
ஓர் இரவு —!!
அப்போது நேரம்
எட்டுமணிக்கு மேல் — — —
ஆம் — — —
அந்த நேரம் தான்
எமது கிராமத்தில் ஓர்
புதிய விடி வெள்ளி
தோன்றிய நேரம்
நிலைய முன்றலில்
வழமை போல் இளைஞர்கள்
கூடியிருக்கிறார்கள்
திடீரென்று ஓர் இளைஞன் —!
எமது — — —
வாசிகசாலை முன்றலில்
வந்து நிற்கின்றான்.
வாட்ட சாட்டமான உடல்
வடிவழகன் தான் அவன்
அகத்தின் அறிவொளியில்
பிரகாசிக்கும் அவன்
அன்பு முகம் — — —.
அந்த முகத்திலே
கருணைக் கடலாய்.
பொங்கி எழும் ஓர்
புன்னகையோடு
அவன் — — —
எங்கள் முன் நிற்கின்றான்.

யாரவன் — — —?
எங்கள் ஒவ்வொருவர் இதயத்திலும்
எழுந்து நிற்கும் கேள்வி
விஜிதரனுக்காக வீரத்துடன் போராடி
இன்று — — —!
தலை மறைவாய் வாழும் ஓர்
பல்கலைக்கழக மாணவன்
என்பதை அறிகின்றோம்
விஜிதரன் — — —!? போராட்டம் — — —?
எமக்கு முற்றாக விளங்கவில்லை
உண்மை தான் — — —!
நாம் — — —!
ஏட்டை அறியோம்
எழுத்தை அறியோம்
ஆனால் — — —!
அன்பை அறிவோம் அதன்
இன்பத்தை நாம் அறிவோம்
ஜீவகாருண்யத்தில்
நிறைந்திருக்கும் எம்
நெஞ்சங்கள்
உன்னை ஏற்றுக்கொண்டது
உனக்காக — — —.
எந்த ஆபத்தையும்
ஏற்றுக்கொள்ளத் தயாரானது.
கல்லும் — — —! முள்ளும்
பற்றையும் — — —! சுடலையுமாய்
காட்சிதரும் எமது
வாழ்விடம் நீ
மறைந்து வாழும்
புகலிடமாய் மாறியது.
எம்முடன் இரண்டறக்
கலக்கத் தொடங்கினாய் — — —!
அக்கா — — —! தங்கை — — —! என்று
நீ அணைக்கும் அணைப்பிலே
எமது கிராமத்துப் பெண்கள்
அறிவைப் பெற்றனர்
அண்ணா — — —! தம்பி என்ற
உன் — — —!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புச் சொல்லிலே
நாம் — — — !
விடுதலை உணர்வைப் பெற்ருேம்
ஆம் — — — !
ஒரு மாதம் தான் எங்கள்
கிராமத்திற்கு நீ வந்து
என்ன ஆச்சரியம் — — — !
புழுதியைக் குடித்து வளர்ந்த
எங்கள் பிள்ளைகள் தான்
எவ்வளவு மாறிவிட்டார்கள் — — —
படிப்பிலே மாற்றம்
பண்பிலே மாற்றம்
அறிவிலே மாற்றம்
அனைத்திலுமே மாற்றம் தான்
கண்ணூடிச் சேரின்
அரவணைப்பின்றி
அவர்கள் தூங்கவே மாட்டார்கள் — — — !
கண்ணூடிச் சேரை
நடுவிலே விட்டு
அவரைச் சுற்றி வியூகம் போல்
சென்றி அமைத்து - எம்
மழலைச் செல்வங்கள்
எமது நி யப் பட்டசாலைக்குள்
தூங்கும் காட்சி — — — !
விடுதலையை விழுங்கி விட்டு
துப்பாக்கிச் சன்னங்களை
வாந்தி யெடுப்போர்க்கு
புரிந்து கொள்ள முடியாத
புதிய காட்சி தான்
ஒவ்வொரு நாளைக்கு
ஒவ்வொரு வீட்டில்
உனக்கு நாம்
உணவளிப்போம்
எந்த நாளும் எங்கள் வீட்டில் தின்று
எம்மை நட்டப்படுத்துகிருனே — — —
எனப் பொருளாதாரக்
கணக்குப் பார்க்கும்
மனிதர்கள் நடுவே

எங்கள் வீட்டில் உண்ண வேண்டும்
எங்கள் வீட்டில் தங்கவேண்டும்
என — — — ! உபசரிக்க
எமக்குள் சண்டை செய்வோம்.
இப்படியாக எம்முடன் நீ
இரண்டறக் கலந்து வாழ்ந்தாய்.
காலமோ — !
எமது வாழ்க்கையிலே — தன்
கோலத்தை இட்டுச்
சென்று கொண்டேயிருந்தது
எம் தேசத்தின் கொள்கையும்
மாற்றம் கண்டது.
ஆனல் — — — !
எங்கள் வாழ்க்கை தான்
மாறவேயில்லை — — — !
வழமை போல் தான்
அன்றும் எங்கள்
பொழுது விடிந்தது
கையிலே ஆயிதங்களுடன்
எங்கள் வயிற்றை நிரப்பும் அந்தக்
கல்லுக்கிடங்கை நோக்கி
நாம் — — — !
சென்று விட்டோம்
இரவு முழுவதும் அங்கே
தூரத்தில் முழங்கிய
வெடிச்சத்தம் — — — !
திடீரென எம்மை நோக்கி
விரைந்து கொண்டு வந்தது.
கிராமத்தி மூலை முடக்கெல்லாம்
மரண ஓலங்கள் — — — !
மக்கள் சிதறி ஓடினர் — — — !
தம் உயிரைப் பாதுகாக்க
சகலரும் ஓடிய போதும்
உன் உயிரை மட்டும்
பாதுகாக்க நீ ஓடவில்லை
மரணத்தை நோக்கிய
பயணத்தில் கூட நீ
எம்முடன் வந்தாய்
நாமும் உன்னுடன் தான் — — — !

www.tamilarangam.net

அகதிகள் முகாமில்
எமக்கோர் புதிய அனுபவம்
அங்கும் ஆடி ஓடி
எமக்காக நீ செய்த
சேவைகள் — — — ! தியாகங்கள் — — — !
அத்தனையும் முடிந்து நாம்
அனைவரும் எமது கிராமத்திற்கு திரும்பினோம்
எம் கிராமத்தின் சூழலிலே
தொடர்ந்தும் ஏற்பட்ட மாற்றம்
எம்மைப் பயமுறுத்தியது
எமக்காக அல்ல
உனக்காக நாம் பயந்தோம்
தொடர்ந்தும் எம்முடன் நீ
இருந்தால் ஏதாவது ஆபத்து
உனக்கு வந்துவிடுமோவென
அஞ்சி—!
ஓர் மூன்று மாதம்தானே
உன்னை எம்மிலிருந்து
பிரித்து வைத்தோம்.
அதற்குள் நீ எங்கு சென்றாய்—?
உனக்கொரு பிள்ளையிருந்தால்
அதைக் கடத்திவந்து
எம் கிராமத்தில்
வைத்துக் கொண்டு
எம் கிராமத்திற்கு
எங்கள் கண்ணாடி சேரை
வரவழைப்போமென
உன் — —
மழலைச் செல்வங்கள் — —
அன்பெனும் நீர் ஊற்றி
நீ வளர்த்து வந்த அந்த
அன்பு மலர்கள் — —!
உங்களை காணும் ஆசையில்
நீங்கள் கற்றுக் கொடுத்த
யுத்த முறையில்
சிந்திக்கின்றார்கள்
அவர்களுக்கு — — — !
அந்தச் சின்னஞ் சிறுசுகளுக்கு
நாம் பதில்சொல்ல வேண்டும்

நீ எங்கு சென்று விட்டாய் — — — !
ஐயோ — — — !!
எங்கள் கண்ணாடிச் சேர்
மரணித்து விட்டாரம்
உன்னை — — — உன் வாழ்க்கையை
புரிந்து கொள்ளாத சிலர்
உளறுகின்றார் — — — ?
நாம் இருக்கும் வரை
நீ எப்படி மரணிக்க முடியும் — —
இல்லை — — — ! இல்லவேலல்லை
நீ வாழுகின்றாய்
எம் நெஞ்சங்களில் வாழுகின்றாய்
எமக்கு உற்ற துணையாய் நின்று
உன் கொள்கையால்
எம் உள்ளத்திற்கு
உணர்ச்சியை ஊட்டுகின்றாய்
ஆம் — — — !! நாமிருக்கும் வரை
உன்னைக் கொல்ல முடியாது.
கொல்லவே முடியாது.
எங்கள் ஊனில் — —
எங்கள் உள்ளத்தில் — — — !
எங்கள் ஆவியில்
நீ — — —!
இரண்டறக் கலந்து விட்டாய்
நாம் இருக்கும் வரை
உன்னைக் கொல்லவே முடியாது
ஆனாலும் உன்னைக் கொன்று விட்டார்களாம் — — !
மக்களின் இதயத்தை புரியாதவர் புலம்புகின்றார்.
எங்கள் கண்ணாடி சேரின்
உடலிலே — — — நெருப்பாய் — — — !
எங்களை நேசித்த அந்த இதயத்திலே — — — !
நெருப்பாம் — — — !!
எங்களை அணைத்த அந்தக்
கரங்களிலே — — — !

www.tamilarangam.net

நெருப்பாம் — — — !!
ஓ — — — !
எங்கள் நேசத்திற் குரியவனே — — — !
உன் உடலை விழுங்கும் அந்த
நெருப்பு — — — !
நீ வாழும் எங்கள் இதயங்களிலும்
நிச்சயம் எரியும்.
அதை அணைத்து — — — !
உன் ஆத்மாவை மீங்கும் வரை
நாம் ஓடமாட்டோம் — — — !
ஆம் — — — !
நாம் ஓயவே மாட்டோம்.

(விமலேஸ்வரன் என்னும் வீர இளைஞனின் நினைவிற்காக — — —! அவன் தலைமறைவு வாழ்கையில் மக்களுக்கும் அவனுக்கும் இருந்த அன்புப் பிணைப்பை மையமாகக் கொண்டு இக்கவிதை புனையப்பட்டுள்ளது.)

ஒரு கிராமிய நண்பன்
06-08-1988.

# மரணத்தில் மரணிக்காதவன்

அயல் நாட்டில் வளம் சேர்க்க
அலைகின்றோர் மத்தியில்நீ
சமுதாய மலர்ச்சிக்காய்
களையாது இங்குழைத்தாய்
சமுதாய அடித்தளத்தில்
ஏழ்மைக்குப் பலியானோர்
பெருவாழ்வு காண வென்றே
நீயுழைத்தாய் நாளுமிங்கு
உயரிய உண்மை, திண்மை
உள்ளன்பு கொண்டு நாளும்
உலகினில் பலர்க்குதவி
உயர்வுக்காய்ச் சேவை செய்தாய்
மரணத்தில் மனிதன் வாழ்வு
மரணித்துப் போகுமென்ற
மானிட வரலாறு இங்கு
மறைந்திடும் உன்து வாழ்வால்
விடியலை நோக்கிக் கூவிய
மண்ணகச் சேவல் நீ
விண்ணகம் சென்றாலும்
விடிந்திடும் ஓர் நாளிங்கு
நீ மறைந்திட வில்லை என்றும்
வாழ்ந்திடுவாய் இங்கு!

— உனது நண்பி —

பாசமிகு நெஞ்சமெல்லாம் பீறிப் பொங்கிப்
பதை பதைத்துக் கதறியழப் பலநாளாக
ஆசை யெலாம் உள்ளத்துள் சுமந்துபெற்ற
அன்னை தந்தை சுற்றமெலாம் அலறிட எங்க
வாசமிகு தமிழ்மொழியான் விமலேஸ்வரன்
வளருமிளம் கல்விக்கொழுந்து வானவர்கோன்
பூஜைக்கு உகந்த புதுமலராய் அங்கு
பொன்னடியில் வீற்றிருக்கப் போய்விட்டிரோ.

— ந. நாகராசா —
சமாதான நீதிபதி
தம்பிராய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஆயிரம் கரங்களிருந்து ஆறுதல் தந்தாலும்
## அண்ணனின் கரமின்றி ஆறுதல் அடைவேனா ?

பதினெட்டாந் திகதியதில்
பதட்டத்துடன் செய்திகேட்டு
பறந்தோடி வரவே நான்
தெருவோரத் திண்ணையிலே
தென்புடனே படுத்திருந்தாய்
அழுகை வரவில்லை
ஆத்திரமே வந்ததண்ணா
அழுவதை நீ விரும்பாயே
ஆக வேண்டியன பார்த்தேனே.


உடன் பிறப்பிலான
உறவாக மட்டுமன்றி
அறிவுபல கூறுவதில் நல்
ஆசிரியனாய் இருந்தாயே
நேர் பாதை காட்டியதில்
நல்வழி காட்டியானாய் நீ
கவலைகளைப் பகிர்ந்து கொள்வதிலே
நண்பியாகத் தானிருந்தாய்
ஆயிரம் கரங்களின்று
ஆறுதல் என்றபோதும்
அண்ணனின் அன்புக் கரங்களின்றி......
ஆறுதல் அடைவேனா ?

அறிவு நூல்கள் பல
ஆசையுடன் தந்தாய்
பரீட்சை முடிய நானும்
படித்து விளக்கமதை
கேட்டறிய வென்றிருந்தேன்
அன்று நீ தந்த அறிவுக்கே
நன்றி கூறி இன்று நான்
நானிலத்தில் வாழுகின்றேன்.

கனடா சென்று கல்வி
கற்க வென்றே அன்று
உனையழைத்தார் அண்ணா
நீயோ......... நன்றிகூறி
தாய்நாடு (தமிழ்) மக்கள் என்று
தத்துவங்கள் கூறிநின்றாய்
தமிழனே யமனாகி
குடித்தானே உன்னுயிரை !

வீட்டிற்கு நீ வந்தால்
விமல் அண்ணாக் குட்டி என்று
விரைந்தோடி வருவேனே !
வினாடி நேரம் கூட
வீண் பொழுது ஆக்காயே
விளக்கங்கள் தருவாயே !
இன்று......... எனக்கு
விடியாப் பொழுதாக்கி
விரைந்தெங்கு சென்றாயோ.

— துயர்தாழா அன்புத் தங்கை —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எமக்குப் புரியவில்லை !

சேர்... !
நீங்கள் செய்த
சேவைகளை அறிவாரா
உங்களை
துடிக்கத் துடிக்கச்
சுட்டுக் கொன்ற
அப்பேதை மனிதர்கள்... ?
சில பேதை மனிதர்களோ
பணத்தைச் சேர்த்தார்கள்
ஆனால் நீங்களோ...?
ஏழை மக்களையும்
கல்வி கற்கும்
மாணவர்களையும் சேர்த்தீர்கள்
அதனால் .........
நீங்கள் இறந்த
செய்தி கேட்டு
உங்கள் உறவினர் மட்டுமல்ல
சில கிராமங்களே
ஆற்றாத துயரில்
கண் கலங்குகின்றன
ஏழைகளின்
பங்காளனை
உங்களை...
அப்பாவியர்கள்
ஏன்...துடிக்கத் துடிக்க
கொன்றனர் ...?
அக்காரணம்தான்
எமக்குப் புரியவில்லை... ?

— ரூபன் —

4-8-88

**" விமலின் இலட்சியப் பயணத்தில் அவன் கரங்களில் வளர்ந்த 13 வயதுச் சிறுவன் ஒருவனின் இதயக் குமுறல் "**



### தந்தை புலம்பல் ( வேறு )

விஞ்சுமெளில் மதிவதனம் மலர்ந் தொளிரக் கண்டு
விளங்கு பெயர் சூட்டியதை நினைந்தழுவனே
பிஞ்சுதனில் பிறையாகி பிராயமதில் பௌர்ணமியால்
மிகுதிறனைக் காட்டியதை நினைந்தழுவனே
படித்தினிது பட்டமது பெற்றுநீ விளங்குபுகழ்
காணாது சென்றதை நினைந்தழுவனே
தங்கையை நான் பாற் பேனெனசொல்லி யேமாற்றிநீ
தவிக்க விட்டேகியதை நினைந்தழுவனே
எனக்கினிக் குறையென்ன எனநம்பி நானிருக்க
நினைவெல்லாம் பொய்யாக்கியதை நினைந்தழுவனே
சதியாளர் குண்டுக்கு இலக்காக்கி உனையழைத்த
ஆதிபரன் தூதரென எண்ணிமனம் தேறினேனே.

### தாயார் புலம்பல்

பெற்றெடுத்த தாயெனது உள்ளம் சோர
பேதையாம் எந்தனது உடலம் வாட
கற்பகமே கயவர் உனைக் கொன்றார் அந்தோ
வையமதில் உன்வாழ்வில் சிறப்புக்காண
மருமகளோடு உன்னை மணக்கோலமதனைக் காண
வளமான கற்பனைகள் செய்தேன் விமலா !
கதற எனைத் தனியே விட்டு நீயும்
விண்ணுலகம் அரசாளச் சென்றதேனோ !

ஐயிரண்டு திங்களுனை வயிற்றிலேந்தி
ஆதரவாய் மகனெனவே அன்பு கூர்ந்து
செய்யதிருக் கோயிலெலாம் வலமும் வந்து
சீராட்டிப், பாராட்டி, வளர்த்தேன் கண்ணே
அழகான மேனியதில் குண்டு பாய்ந்தால்
பாவியென் வயிற்றிலும் அத்தீயே ஓங்கி
பெற்றவயி றெரிகிறதடா விமலா ஐயோ
பேதை துயர் தீரவழி கூறாய் அந்தோ,

www.tamilarangam.net



## சகோதர — சகோதரிகள் பிரலாபம்

எந்நாளும் எம்மோடு இனிமையுடன் தான் பேசும்
இயல்பதனை நினைந்தழுவமோ
மின்னுமல் இடி இடித்தெம் தலைமீது வீழ்ந்ததென
மேவுநிலை நினைந்தழுவமோ
உன்னுவி பிரிந்த உடல் அனாதரவாய்க் கிடந்ததை
உன்னியே நினைந்தழுவமோ
மணக்கோலம் காணவே எதிர்பார்த்து நாமிருந்தோம்
பிணக்கோலம் காட்டிவைத்து எங்கு சென்றாய் சோதரனே.

## பெருமக்கள் பிரலாபம் ( வெண்பா )

அன்பும் பண்பும் அழியாத இன்சொல்லும்
சித்தப்பா என்னும் பாசமுடன் — இருந்தீரே
இன்றெம்மை விட்டு எங்கே மறைந்தீரோ
நின் றெய்மை பாராய் நினைந்து.

## மருமக்கள் பிரலாபம்

வேல் மாமா என்றோம், விமல் மாமா என்றும் சொன்னோம்
நீராக முன்னே வந்து கன்டொஸ் டொபிகள் தந்தீர்
ருசியாகச் சுவைத்தோம் மாமா நன்றாகப் படியுமென்றீர்
மீண்டு நான் வர்ரபோதும் சுவீற்சுகள் தருவேனென்றீர்
எப்ப நீங்க வருவீரென்று ஆவலாய் காத்து நிற்போம்.

## பல்கலைக் கழக ஆசிரியர் பிரலாபம்

அலை மகளின் அழகலைய அழகன் சிவன்
அரும் பணிகள் ஆற்றும் வீரன்
கலை மகளின் கருணை நிறை விமலனிவன்
கலை மிளிரும் செல்வ னுவான்
சில காலம் எம்மிடம் கற்ற இவன்
சிந்தை யெலாம் நிறைந்த வீரன்
விலை மதிப்பு அற்ற தொரு திற லோனுவான்
வித்தைகள் விந்தையாய்க் கற்று நின்றான்
நிலை யழிந்து நெஞ்சுறுத்தித் தளர்ந்தனனே
நினைக்கவே முடியவில்லை
உலை யதனின் மெழுகாக உருகு கின்றோம்
உன் ஆத்மா அடைக சாந்தி !



## நண்பர்கள் பிரலாபம்

பாரெலாம் புகழோங்கப் படித்து நீ பட்டம் பெற்றாய்
ஏழைகள் துயர் துடைக்கத் துணிந்து செயலாற்றி நின்றாய்
ஏழைகள் படித்துயர வகுப்புகள் நடத்தி வைத்தாய்
தோழர் ஆசிரியர் மூலம் இலவசக் கல்வி தந்தாய்
சேவையில் சிறந்ததான சமூக சேவைக்கேநீ
உன்னையே அர்ப்பணித்து உயிரையே கொடுத்துவிட்டாய்.

குடும்பத்தைக் காக்க வல்ல ஊரையே காக்க நின்றாய்
இடர்களினி வந்தே நேரில் விடாது நீ காத்து நிற்பாய்
சண்டாளர் கையில் சிக்கி சடுதியாய் மறைந்து விட்டாய்
நல்லை நகர்ச் சட்டநாதன் என்றுமே சாட்சி சொல்வான்

## பூநகர் மக்கள் பிரலாபம்

கண்ணாடி மதி வதனம் மிளிரக் கண்டோம்
ஜீன்சி ஜெடு புதிய உடை அழகைக் கண்டோம்
முத்தான பல் வரிசை சிரிப்பின் கவர்ச்சி
செவ்வாயின் திறன் மொழியின் உணர்ச்சி பொங்க
ஓய்யாத நடையழகு நாங்கள் காண
களங்க மிலா உள்ள மதில் பயமே யின்றி
தாய் நகராம் பூநகரி மக்கள் உய்ய
அரிய பணி செய்து வரும் நாளில் உன்னை
இரக்க மிலா ஈனர்களின் துப்பாக்கி வேட்டதனுல்
தன்னடியில் சேர்த்தனனே விடத்தல் விநாயகனும்.

## தேற்றம்

இந்திய நாட்டின் விடுதலைக் குழைத்திட்ட காந்தி எங்கே
அமரிக்காவின் அடிமை களைந்த ஆப்ர காம்லிங்கன் எங்கே
அவர் பிறகே வந்த தியாகி யோன் கெனடி எங்கே
[redacted]
ஊர் காத்த தலைவர்கள் நீதிக்கு வாதாடிப் போன தெங்கே
கயவர்களின் குண்டுக்கே இலக்காகி மாண்டார்க ளன்றே
அவ்வழியில் விமலனும் சென்றானே இங்கே
இறை நியதி யென்றே கண்ணனும் பகர்ந்தான் கீதையிலே
இதை எண்ணியே எம் மனமும் ஆறுவது இயல்பே.

சுபம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றியுரை

## நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்

எதிர் பாரா வகையினிலே
எமையெல்லாம் தவிக்கவிட்டு
விதி விரித்த வலை தனிலே
வீழ்ந்து விட்ட எம்புதல்வன்


காவியத் தலைவனின்
இறுதிப் பயணத்தில்
துன்பத்தில் இணைந்து
பேருதவி ஈந்திட்ட
பெருமனங்கள் அத்தனையும்

நெஞ்சிருக்கும் வரைக்கும்
நினை வினிலே நின்றாடும்
நன்றி பெறும் பேரூற்று
எங்கள் மனத்தில் சுரந்து நிற்கும்.

இங்ஙனம்

தந்தை, தாய்
சகோதரர்கள
மைத்துனர்.

தம்பிராய்,
பூநகரி.



# வங்சாவழி

தகப்பன் அம்பையா — தம்பு + வேலுப்பிள்ளை — பொன்னம்மா தாய்

**சகோதரர்மார்**

1. இராசேந்திரம் ( J. P )
2. சபாரட்ணம்
3. செல்வநாயகம் ( காலமானர் )
4. பரமேஸ்வரன்
5. விமலேஸ்வரன்

**அண்ணிமார்**

தங்கமலர்
மங்கையர்கரசி
செல்வராணி

**மைத்துனர்மார் — சகோதரிகள்**

விஸ்வலிங்கம் — நாகேஸ்வரி
பாலசுப்பிரமணியம் — புவனேஸ்வரி
சச்சிதானந்தசிவம் — தவநாயகி
சண்முகலிங்கம் — பராசக்தி
விமலேஸ்வரி

**பெறுமக்கள்**

1. இராசநாயகி, இராமேஸ்வரநாதன், ராதிகா, ராசநாதன்
2. துவாரகா, சந்திரமோகன், மேனகா, ருக்மணன்
3. திருச்செல்வம், கஜன்

**மருமக்கள்**

1. சிவநாயகி, சாந்தநாயகி, வசந்தநாயகி, தேவநாயகி
2. பாலசந்திரன், பாலரசனி. பாலஇந்திரன், பாலலோசினி, பரந்தாமன் சயந்தன்
3. சதானந்தன், அஜந்தினி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்